செ. கு. எண்: 155 நாள்: 02.09.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 2.9.2018

ஜெயின் மதத் துறவி திரு.முனி தருண் சாகர் அவர்கள் நேற்று 1.9.2018 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

மத்திய பிரதேச மாநிலத்தில் பிறந்த ஜெயின் துறவி திரு.முனி தருண் சாகர் அவர்கள், 1981–ஆம் ஆண்டு சமண துறவியானார். ஜெயின் சமயத்தின் கருத்துக்களை பரப்புவதற்காக பல்வேறு இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றி ஏராளமான பக்தர்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றவர் ஜெயின் துறவி திரு.முனி தருண் சாகர் அவர்கள்.

ஜெயின் சமயத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவரும், அனைவரிடமும் அன்பாக பழகக்கூடிய பண்பாளருமான துறவி திரு.முனி தருண் சாகர் அவர்களின் மறைவு ஜெயின் சமயத்திற்கு பேரிழப்பாகும்.

ஜெயின் மதத் துறவி திரு.முனி தருண் சாகர் அவர்களை இழந்து வாடும் ஜெயின் சமயத்தின் பெரியோர்களுக்கும், அவரது பக்தர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**